(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 54.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 மே 22, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

11/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபை வசமுள்ள காணிகளை பாரிய கருத்திட்டங்களுக்கு வழங்கும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) வளவ வலயத்தில், சந்திரிகா குளப்பிரிவில் வாழைச் செய்கைக்காக 'டோல் லங்கா' கம்பெனிக்கும், 'விற்றா ஓகனி' கம்பெனிக்கும் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக்காணிகள், உரிய நடைமுறைக்கு அமைவாக வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

701/2025

கௌரவ றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆசிரியர் கலாசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கலாசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக காணப்படுவதால், குறித்த கலாசாலைகளை கல்வித்துறையுடன் தொடர்புடைய வேறு பயிற்சி நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) தேசிய கல்வி நிறுவகம் பட்டங்களை வழங்குவதற்கான தகைமையுடைய நிறுவகம் என்பதால், ஆசிரியர் கலாசாலைகளில் ஒரு வருட முழுநேர பட்டப்பின்படிப்பு பாடநெறியை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி ஆசிரியர் கலாசாலைகள் சம்பந்தமாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

713/2025

கௌரவ தனுஷ்க ரங்கநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இலங்கையின் தேசிய தேயிலை ஏற்றுமதியில் மேற்படி சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு எவ்வளவு என்பதையும்;

(iii) களுத்துறை மாவட்டத்தில் உரம் மற்றும் விவசாய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புடைய சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நலனோம்புகையின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களுக்கு உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்ற முறை மற்றும் அந்த சங்கங்களில் நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவு நடாத்தப்படுகின்ற முறை பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி முறைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி முறைகள் தொடர்பிலான விபரங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

718/2025

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள மொத்த வயற் காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) 2024/2025 பெரும்போகத்தில் மேற்படி மாவட்டத்தின் மொத்த நெல் அறுவடை யாது என்பதையும்;

(iii) நெல் அறுவடை செய்வதற்கு முன்னதாக மொனராகலை மாவட்டத்தின் அனைத்து நெல் விவசாயிகளுக்கும் உர மானியம் வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) மேற்படி நெல் அறுவடையிலிருந்து நெற் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) மொனராகலை மாவட்டத்திலுள்ள அரச நெற் களஞ்சியங்களின் எண்ணிக்கை, அவை ஒவ்வொன்றினதும் முகவரிகள் மற்றும் அவற்றின் கொள்ளளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

789/2025

கௌரவ சுதத் பலகல்ல,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹியங்கனை நகரில் விவசாயப் பொருள் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு இலங்கை வங்கியை அண்டிய காணியில் 2004 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) தற்போதைய சனாதிபதி கமத்தொழில் அமைச்சராக மேற்படி காணியை கமநல சேவைகள் திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்பதையும்;

(iii) அதன் பொருட்டு மஹியங்கனை கமநல சேவை செயற்குழுவினரும் விவசாயிகளும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள் என்பதையும்;

(iv) மேற்படி காணியை, மஹியங்கனை, 48ஆம் மைல்கல், அராவத்தயில் வசிக்கும் திரு. வை.எம். ரத்னபாலவுக்கு முன்னுரிமை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தின் 4/10/75144 இன் கீழ் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) முன்னுரிமை அடிப்படையில் அரச காணிகள் வலுவான மற்றும் விசேட காரணங்களின் அடிப்படையில் மாத்திரமே அளிக்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகளை ஒப்படைப்பதற்கு 80 வயதுக்கு மேற்பட்ட ஒருவரை தெரிவு செய்தமைக்கான காரணம் யாது;

(ii) அரச காணிகளை பாராதீனப்படுத்தும்போது, அரசின் தேவைகளுக்கு போதுமான நிலம் உள்ளதா என்பதும் தேர்ந்தெடுக்கப்படும் நபரின் உடல் தகுதியும் கவனத்தில் கொள்ளப்படுவதோடு பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்ட ஆளொருவருக்கு அரச காணிகள் வழங்கப்படுவதில்லை என்பதை அறிவாரா;

(iii) மேற்படி காணியை ஒப்படைக்கும் போது மேற்கண்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதா;

(iv) மேற்படி குத்தகை அங்கீகாரம் இரத்துச் செய்யப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

795/2025

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சமுதாய நீர்வழங்கல் நிலையங்களை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்குரிய வழிமுறை யாதென்பதையும்;

(iii) பொறுப்பேற்றுக்கொள்ளப்படும் சமுதாய நீர்வழங்கல் நிலையங்களில் உள்ள சகல ஆதனங்களும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு பொறுப்பேற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) முறையான கணக்காய்வு மேற்கொள்ளப்படாது தெஹிஅத்தகண்டிய, நவ மெதகம, சமுதாய நீர்வழங்கல் பிரிவு சபையினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி பிரிவினை பொறுப்பேற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

796/2025

கௌரவ ஈ.எம். பஸ்நாயக,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பிரதான ஆறுகள், கிளை ஆறுகள், நீரோடைகள் மற்றும் கால்வாய்களை அண்டியதாகக் காணப்படும் மணல் அகழ்விடங்களின் எண்ணிக்கை மற்றும் இவற்றைச் சார்ந்து தொழில் புரிவோரின் எண்ணிக்கை ஆகியன வெவ்வேறாக யாது;

(ii) மேற்குறிப்பிட்ட மணல் அகழ்விடங்களில் சட்டரீதியான மணல் அகழ்விடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) சட்டவிரோதமான மணல் அகழ்விடங்களும் உள்ளதென அறிவாரா;

(iv) ஆமெனில், மேற்படி மணல் அகழ்விடங்கள் குறித்து மேற்கொள்ளப்படும் சட்டரீதியான நடவடிக்கைகள் யாவை;

(v) மணல் அகழ்வினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் நிர்மாணப் பணிகளுக்கு வருடாந்தம் தேவைப்படும் மணலின் அளவு கணக்கிடப்பட்டுள்ளதா;

(ii) அத்தகைய அளவினை நிரம்பல் செய்வதற்கான இயலுமை காணப்படுகின்றதா;

(iii) இன்றேல், இதற்கான மாற்றுவழிகள் காணப்படுகின்றனவா;

(iv) மணலை வழங்குவதற்கான புதிய வழிமுறைகள் யாவை;

(v) மேற்படி புதிய மணல் அகழ்வு வழிமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா;

(iv) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

816/2025

கௌரவ அஜந்த கம்மெத்தெகே,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெய்யந்தர நகரை அபிவிருத்தி செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தில் உள்ள முன்மொழிவுகளில் இன்றளவில் நடைமுறைப்படுத்தப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) எஞ்சியுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி திட்டத்தின் படி தெய்யந்தர ஆரம்ப பாடசாலையை தற்போது அமைந்துள்ள இடத்திலிருந்து அகற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிறுவனம்/ நபரின் விபரம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

817/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த 2025 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களும் நாய்க்குட்டிகளும் பெருந்தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கைவிடப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் சம்பவிக்கும் நாய்க்கடி மற்றும் வீதி விபத்துகளைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

823/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலும் இன்றளவில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களில் விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அதற்கைமைவாக குறிப்பிட்ட எண்ணிக்கைகொண்ட மாணவர்களுக்கு விடுதி வசதிகள் கிடைக்காததை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இன்றளவில், கொழும்புப் பல்லைக்கழகத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற விடுதிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் இருபாலார் எனும் வகைப்படுத்தலின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுமார் 800 மாணவிகளின் விடுதி வசதிகளைப் பூர்த்திசெய்த “முத்தையா” பெண்கள் விடுதி அமைந்திருந்த கொழும்பு 02 பிரதேசத்திலுள்ள காணி, 2020 ஆம் ஆண்டில் கையகப்படுத்தப்பட்டதை அறிவாரா?

(ii) மேற்படி விடுதி அமைக்கப்பட்டிருந்த காணியின் தற்போதைய உரித்தை எந்த நிறுவனம் கொண்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி விடுதி உடைத்து அகற்றப்பட்டு 05 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அங்கு இதுவரையில் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த முழுக் காணி அல்லது அதன் ஒரு பகுதி மீண்டும் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 மார்ச் 19 ஆம் திகதிய 2428/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 01 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 01

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 01002 “இலஞ்சத்தினைக் கண்டறிய இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கான முற்பணம் – இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 50,000,000 இலிருந்து ரூபா. 150,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 02 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 02

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 21302 “வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 20,000,000,000 இலிருந்து ரூபா. 8,500,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 03 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 03

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 22302 “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடிப்பொருட்கள்) – இலங்கை கடற்படை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 2,700,000,000 இலிருந்து ரூபா. 2,650,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 04 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 04

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 23202 “சிறைச்சாலைக் கைத்தொழில் மற்றும் விவசாய முயற்சிகள் - சிறைச்சாலைகள் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | <u>விடயம்</u> | <u>திருத்தம்</u> |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 140,000,000 இலிருந்து ரூபா. 160,354,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 140,000,000 இலிருந்து ரூபா. 160,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 05 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 05

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 24702 “கைப்பற்றப்பட்ட, தடுத்து வைக்கப்பட்ட பொருட்களுக்கான செலவினங்கள் – இலங்கைச் சுங்கம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | <u>விடயம்</u> | <u>திருத்தம்</u> |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 8,000,000 இலிருந்து ரூபா. 16,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 06 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 25003 “நானாவித முற்பணங்கள் – அரச கணக்குகள் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | <u>விடயம்</u> | <u>திருத்தம்</u> |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 1,500,000 இலிருந்து ரூபா. 400,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 07 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 07

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 30602 “புகையிரதக் களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு – இலங்கைப் புகையிரதத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 2,500,000,000 இலிருந்து ரூபா. 3,000,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 2,500,000,000 இலிருந்து ரூபா. 1,900,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 8),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 08 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 08

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31002 “அரசாங்க தொழிற்சாலைக் களஞ்சிய முற்பணக் கணக்கு – அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 200,000,000 இலிருந்து.<br>ரூபா. 50,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 40,000,000 இலிருந்து.<br>ரூபா. 80,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 50,000,000 இலிருந்து.<br>ரூபா. 60,000,000 வரை |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,<br>
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார<br>
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி<br>
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 9),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 09 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 09

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31003 “அரசாங்கத் தொழிற்சாலை பணிநிறைவு முற்பணக் கணக்கு – அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 400,000,000 இலிருந்து.<br>ரூபா. 350,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 10 ),— 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளைகள் கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2024.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும். )

**அட்டவணை**

(இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

**அட்டவணை**

**2023 இன் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2024 ஆம் நிதியாண்டு தொடர்பில் 2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 8 ன் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்கள் பற்றிய அட்டவணை.

**குழுக் கட்டளை இல. 01**

2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்றவகையில், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 18701, 20201, 20401, 21001, 21101, 24501, 24701, 25401, 26101, 27401, 30401, 31001, 33501, 33601, 50101, 22101, 26301, 28201, மற்றும் 32701 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | செலவின இல. | II அரசாங்கச் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லை | | III அரசாங்கச் செயற்பாட்டு வரவிற்கான ஆகக்குறைந்த எல்லை | | IV அரசாங்கச் செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | முதலீட்டு மேம்பாடு அமைச்சர் | 18701 | - | - | 6,000,000 | 5,876,298.39 | - | - | 10 |
| 2. | முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 20201 | - | - | 2,600,000 | 1,950,000 | - | - | 11 |
| 3. | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் | 20401 | - | - | 5,000,000 | 4,850,000 | - | - | 12 |
| 4. | அரசாங்கத ◌ெதகவல் திணைக்களம் | 21001 | - | - | 11,000,000 | 10,000,000 | - | - | 13 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | அரசாங்க அச்சகத் திணைக்களம் | 21101 | - | - | 60,000,000 | 57,000,000 | - | - | 14 |
| 6. | அரசாங்க நிதித் திணைக்களம் | 24501 | - | - | 4,000,000 | 3,500,000 | - | - | 15 |
| 7. | இலங்கைச் சுங்கம் | 24701 | - | - | 55,000,000 | 52,000,000 | - | - | 16 |
| 8. | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 25401 | - | - | - | - | 320,000,000 | 336,000,000 | 17 |
| 9. | மாவட்டச் செயலகம், காலி | 26101 | - | - | - | - | 320,000,000 | 410,000,000 | 18 |
| 10. | மாவட்டச் செயலகம், அனுராதபுரம் | 27401 | - | - | - | - | 260,000,000 | 345,000,000 | 19 |
| 11. | வளிமண்டலவியல் திணைக்களம் | 30401 | - | - | 8,700,000 | 6,500,000 | - | - | 20 |
| 12. | அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் | 31001 | - | - | 16,000,000 | 13,000,000 | - | - | 21 |
| 13. | தேசிய கல்வி ஆணைக்குழு | 33501 | - | - | - | - | 1,500,000 | 3,100,000 | 22 |
| 14. | வணிகக் கப்பற்றுறைச் செயலகம் | 33601 | - | - | - | - | 6,000,000 | 11,000,000 | 23 |
| 15. | அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் | 50101 | - | - | - | - | 1,800,000 | 8,000,000 | 24 |
| 16. | தொழில் திணைக்களம் | 22101 | 75,000,000 | 77,900,000 | - | - | - | - | 25 |
| 17. | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 26301 | 80,000,000 | 80,500,000 | - | - | - | - | 26 |
| 18. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | 250,000,000 | 260,108,952.10 | - | - | - | - | 27 |
| 19. | காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களம் | 32701 | 20,000,000 | 20,000,400 | - | - | - | - | 28 |

2025.04.27 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**